# சீன ராஜதந்திரியை கைது செய்ய உத்தரவு


egistered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49
போன் 889

National Tamil Daily

மலர் 9
இதழ் 126
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 3 ரபி அவ். 8 சனிக்கிழமை [17-6-67]


## இந்திய அரசாங்கம் நடவடிக்கை

புதுடில்லி, ஜூன் 16

**புதுடில்லியிலுள்ள சீன தூதரகத்தின் முதல் காரிய தரிசி திரு. சென்-லு-கிதூதரகத்தை விட்டு வெளியில் வந்தவுடன் கைதுசெய்யப்படுவார்.!**

இத்தகவலை இன்று இந்திய வெளி உறவு மந்திரி திரு. சாக்ளா லோக்சபையில் அறிவித்தார்.

சீன தூதரகத்தின் முதல் காரியதரிசியின் ராஜிய அந்தஸ்தை இந்திய அரசாங்கம் பறித்துள்ளதுடன் அவரை நாட்டை விட்டு வெளியேறவும் உத்தரவிட்டுள்ளது. சீன தூதரகத்தின் மூன்ருவது காரியதரிசி விருபபத்தகாத நபர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் காரியதரிசி தூதரகத்தை விட்டு வெளியில் வந்ததும் கைது செய்யும்படி

[6-ம் பக்கம் பார்க்க]

# இந்திய வடக்கு எல்லையில் சீனப் படைகள் குவிப்பு

## பார்லிமெண்டில் சுவர்ண்சிங் தகவல்

புதுடில்லி, ஜூன் 16

இந்தியாவின் சிக்கிம் எல்லையில் சீனத்துருப்புகள் குவிக்கப்படுவதாகவும், சில மைல் தூரத்திலேயே அவை நிலைகொண்டுள்ளதாகவும் லோகசபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் வட எல்லையில் சில காலமாகவே சீனத் துருப்புகள்நெருங்கி வந்துள்ளதாகவும், இந்த அபாயத்தை அரசாங்கம் அறிந்திருக்கிறது என்றும் பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் அறிவித்தார்.

சிக்கிம் எல்லையில், சீனத் துருப்புகளுக்கும் இந்தியத் துருப்புகளுக்கும், சில அடி தூரமே வித்தியாசம் இருப்பதாகச் சபையில் கூறப்பட்டதைப் பாதுகாப்பு மந்திரி மறுத்தார். சமீப காலத்தில் வடஎல்லைப்பகுதியில் எவ்வித சண்டையும் நடைபெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிக்கிம் எல்லையில், சீனத் துருப்புகள் ஒலிபரப்பி மூலம் இந்தியத்துருப்புகளுக்குப் பிரசாரம் செய்து வந்துள்ளனரென்றும், ஆனால், இந்தியத் துருப்புகள் அப்பிரசாரத்தை அதற்குரிய இகழ்ச்சியுடன் அசட்டை செய்துள்ளனர் என்றும் பாதுகாப்பு மந்திரி மேலும் தெரிவித்தார். அப்பிரசாரத்துக்கு எதிர்ப்பிரசாரம் இந்தியா செய்துவருவதாகவும் அவர் கூறினர்.

'சிக்கிமியின் பாதுகாப்புக்கு இந்தியாவே பொறுப்பை ஏற்றுள்ளது என்பதைச்சீன நன்கு அறிந்துள்ளதென்றும், அதை உதாசீனம் செய்யும் நடவடிக்கை எதிலும் சீன இறங்கினல், நாம் வாளாவிருக்கமாட்டோம்' என்றும் திரு. சுவர்ணசிங குறிப்பிட்டார்.

## யாழ். இரத்த வங்கிக்கு 100மாணவர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலத்தைச் சேர்ந்த 100 மாணவர்கள் யாழ்ப்பாணம் இரத்த சேமிப்பு வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

தேசீய சேவை தினத்தை அனுஷ்டித்தபோதே இம் மாணவர்கள் இவ்விதம் இரத்ததானம் செய்தார்கள்.

இத்தினத்தன்று இக் கல்லூரி மாணவ மாணவிகள் அரியாலை மேற்கிலுள்ள மருத்துவ விடுதிக்குச் சென்று அங்குள்ள கர்ப்பிணிகளுக்கு பணிபுரிந்தார்கள்.

யாழ். மாநகரசபை நிர்வாகத்தில்

## அமைச்சருக்கு திருப்தியில்லை என்கிறர் இராஜசூரியர்

யாழ்ப்பாணம், சனி

''யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு தமது அமைச்சின் சிரேஷ்ட செயலாளர்களில் ஒருவரை ஒவ்வொரு வாரமும் இங்கு அனுப்புவதாக உள்ளூராட்சி அமைச்சர் முடிவு செய்திருக்கிறர். நான் அமைச்சரைச் சந்தித்தபோது அவர் இதை என்னிடம் தெரிவித்தார். மாநகரசபை நிர்வாகம் 'திருப்தி' யாக இருந்தால் அமைச்சர் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கமாட்டார்'' என்று யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னுள் அங்கத்தவர்களில் ஒருவரான திரு. ஏ. ஜி. இராஜசூரியர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறர்.

எந்த விதமான மிக முக்கிய வேலையையும் செய்யக்கூடாதென அமைச்சர் கூறியிருப்பதாகவும் விசேஷ ஆணையாளர் செய்யும் எந்த முடிவும் இரு விசேஷ ஆணையாளரால் ஒப்பமிடப்பட வேண்டுமென்று அமைச்சர் கூறியிருப்பதாகவும் திரு. இராஜசூரியர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுன்ஞகம் நகரசுத்தித் தொழிலாளர் பிரச்னை

## 'சமரசமில்லையேல் யாழ். கிளை வேலைநிறுத்தத்தில்குதிக்கும்'

### உள்ளூராட்சி அமைச்சருக்கு தொழிலாளர்சங்கக் காரியதரிசிதந்தி

காங்கேசன்துறை, வியாழன்

பதின்மூன்று நாட்களாக வேலை நிறுத்தத்தில ஈடுபட்டிருக்கும் சுன்ஞகம் பட்டினசபை நகரசுத்தித் தொழிலாளர் விஷயத்தில் எவ்வித சமரசமும் ஏற்படாவிட்டால் தமது யாழ் மாவட்ட சங்கக்கிளை வேலை நிறுத்தத்தில்குதிக்குமென்று ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. திருச்செல்வத்துக்கு ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி அனுப்பிவைத்துள்ள தந்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

சுன்ஞகம் பட்டினசபை நகரசுத்திகரிப்பு தொழிலாளர்களின் குடும்டத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் பட்டின சபைக்கு சொந்தமான கிணற்றில் குளிக்கும் போது வைரவன் கணபதி என்பவர் தூஷித்ததாகவும்

(6-ம்பக்கம் பார்க்க)

## நிலைமையை விளக்குகிருர் பட்டினசபைத் தலைவர்

உடுவில், வியாழன்

''சுன்ஞகம் பட்டின சபையின் எல்லைக்குட்பட்ட சகல இடங்களுக்கும் நல்ல ரோட், தெரு, வெளிச்சம் போன்ற பல வசதிகள் செய்வதற்காக வீட்டுவரி கஷ்டப்பட்டு அறவிடப்படுகிறது. இப்படி அறவிடப்படும் வரிப்பணம் வீண் விரையமாக்கப்படக் கூடாது சந்தையில்சேர்க்கப்

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள

## ஆபாச விளம்பரப்பலகையை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திற்கு எதிரே உள்ள ஆபாசமான விளம்பரப் பலகையை அகற்றவேண்டும் அல்லது ஆபாசமில்லாத வகையில் மாற்றவேண்டுமென மாநகரசபை கமிஷனர் சம்பந்தப்பட்ட விளம்பர சொந்தக்காரருக்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

பஸ் நிலையத்தைப் பார்வையிடச் சென்ற மந்திரி அவ்விளம்பரப் பலகையை பார்வையிட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இவ்விளம்பரப் பலகையில் ஓர் தமிழ் பெண், நீச்சல் உடையில் அரை நிர்வாணமாக வரையப்பட்டிருப்பதாகவும், சிறுவர்களும் பெண்களும் நடமாடும் பஸ் நிலையத்தில் இவ்விளம்பரப் பெண் இருப்பது பண்பாட்டிற்கு மாருனதென்றும் சில வரியிறுப்பாளர்கள் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தின் கவனத்திற்கு கொண்டுவந்ததாக தெரியவருகிறது.

கடந்த நான்கு தினங்களாகக்காட்சிக்கிருந்த அந்த விளம்பரம், நேற்று முதல் சாக்கினுல் மூடிக்கட்டப்பட்டுள்ளது.

### கொலை வழக்கு ஒத்திவைப்பு

காங்கேசன்துறை, வெள்ளி

வட்டுக்கோட்டை பிலவத்தை கார்த்திகை [illegible] முக்கொலைவழக்கு [illegible] தம் 23ம்திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று நடைபெற்ற தேசிய லொத்தர் சபையின் 146வது இலக்க சுவீப் முடிவுகள் பின்வருமாறு:

**முதலாவது பரிசு**

18 M 0858-ரூ. 100,000

**இரண்டாவது பரிசு**

35 V 0313-ரூ. 40,000

**மூன்றாவது பரிசு**

08 D 0771-ரூ. 10,000

[6-ம் பக்கம் பார்க்க]

## மலை சரிந்ததால் 8 பேரின் உயிர் பலி

கொழும்பு, வெள்ளி

நேற்றிரவு மலை ஒன்று சரிந்து விழுந்ததின் காரணமாக ஒரு குடும்பத்தில் 7 பேரும், வேரெருருவரும் கொல்லப்பட்டார்கள்.

தெரணியகலைப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

28 வயதான ஓர் ஆசிரியர் வீட்டின்மீது மலை சரிந்து விழுந்தபோது அவ்வாசிரியரும், அவர் மனைவியும், மூன்று குழந்தைகளும், இரண்டு சகோதரர்களும் மரணமானுர்கள். இவ்விபத்தில் தேட்டத் தொழிலாளி ஒருவரும் மரணமானுர். ஆசிரியரின் குடும்பத்தவர்களின் சடலங்கள் பொலிசாரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளியின் சடலம் இன்னும் அப்புறப்படுத்தப்படவில்லை.

இவ்விபத்தில் இரண்டு வீடுகள் நாசமாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

நாம் விரும்பிச் செய்யும் எதுவும் நமக்குத் தொல்லைதர முடியாது.
—தோமஸ் ஜெபேர்சன்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு
ஆனி 3 மீ உ (17-6-67)


## சீனத்துடன் ராஜீயஉறவு

சீனாவிலுள்ள இந்திய தூதரகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள்மீது, சீனாவின் இராணுவ இரகசியங்களை உளவறிந்ததாக சீன அரசாங்கம் குற்றஞ்சாட்டி, நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி குற்றவாளிகளெனக் கண்டு, நாடு கடத்தியிருக்கிறது. ஒரு நாட்டிலுள்ள இன்னொருநாட்டுத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தகாத முறையில் நடந்தால் அவர்களை நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடுவதும் அவர்கள் நடத்தை பற்றி அவர்களின் அரசாங்கத்துக்குப் புகார் செய்வதும் நடைமுறையிலிருந்துவரும் பண்புள்ள சம்பிரதாய முறை. நீதிமன்றத்தில் விசாரணை செய்து 'தண்டனை' விதிப்பது இதுவரை எந்த நாடும் கைக்கொள்ளவில்லை. இந்தியத் தூதரக அதிகாரிகள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பற்றி விசாரணை செய்த நீதிமன்றமும் அவர்களை நாடுகடத்தும் படிதான் உத்தரவிட்டிருந்தது. ஆனால் 'செங்காவலர்' நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பற்றியும் சீன அரசாங்கத்தின் உத்தரவையும் மீறி அந்த அதிகாரிகள் இருவருக்கும் 'கடும் தண்டனை' வழங்கியிருக்கின்றனர். நாட்டை விட்டுப் புறப்படுவதற்காகவிமான நிலையத்துக்கு வந்த இரு அதிகாரிகளும் செங்காவலர்களினால் அடிபட்டு, உதைபட்டு, இழுபட்டு சித்திரவதைக்குள்ளாகி, சீனாவிலிருந்து வெளியேறியிருக்கின்றனர். இச்சம்பவம் பற்றி சீன அரசாங்கமோ, சீன மக்களோ நிச்சயம் பெருமைகொள்ள முடியாது. செங்காவலரின் இந்த பண்பற்ற செயல் சீனாவுடன் ராஜீய உறவு வைத்துள்ள இதர நாடுகளுக்கும் கவலையளிப்பதாகும்.

பீகிங்கில் தூதரக அதிகாரிகள் தாக்கப்பட்டிருப்பதும் தூதரகங்கள் தாக்கப்பட்டுள்ளதும் இது தான்முதல்தடவையல்ல. 'செங்காவலர் இயக்கம்' அங்கு தலையெடுத்தபின், சோவியத், கிழக்குஜெர்மனி, பிரிட்டிஷ், நெதர்லாந்து, இந்தோனேஷிய தூதரகங்களும் தூதரக அதிகாரிகளும் செங்காவலர் கையில் அகப்பட்டு சித்திரவதைக்குள்ளாகியிருக்கின்றனர். அவர்களின் இச்செயல்களுக்கு சோவியத்தும் மற்றும் பாதிக்கப்பட்ட நாடுகளும் சீன அரசாங்கத்திடம் வன்மையான 'ஆட்சேபம்' தெரிவித்திருக்கின்றன. 'பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்த கதை'யாகளதற்காகவோ தொடங்கப்பட்ட செங்காவலர் இயக்கம் சீனத் தலைவர்களின் கட்டுப்பாட்டையும்மீறி நாட்டின் முன்னேற்றத்தையும் கட்டுப்பாட்டையும் சீர்குலைத்திருக்கையில்சீன அரசாங்கம் என்ன செய்வது?

உலகில் எல்லோரையும் பகைத்துக்கொண்டு உள்நாட்டிலும் ஒழுங்கும் கட்டுப்பாடும் குலைந்து மோசமான நிலை ஏற்படுவதற்கு முன்னர் செங்காவலர் இயக்கத்தைக் கட்டுப்படுத்த சீனத்தலைவர்கள் தாமதமின்றித்தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

சீனாவில் இந்திய தூதரக அதிகாரிகள்மீது சீனா 'பழி' சுமத்தியதும் அவர்கள்அங்கு நடத்தப்பட்ட முறையும் இந்திய அரசாங்கமும் 'பதில் நடவடிக்கை' எடுக்கத்தூண்டியிருக்கிறது. சீனத்தூதரகத்தைச்சேர்ந்த இரு அதிகாரிகளை 'விரும்பத்தகாதவர்கள்' எனக்கூறி நாட்டைவிட்டு வெளியேற இந்திய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. புதுடில்லியிலும் சீன தூதரகத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோதும்'பண்பு' தவறுமல் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்தியிருக்கிறார்கள்; முறைதவற இந்திய அரசாங்கம் விட்டுவிடவுமில்லை.

தூதரக அதிகாரிகள் பீகிங்கில் நடத்தப்படுவதற்கு பதில் நடவடிக்கையாக இதர நாடுகளிலும் நடைபெறுமானால் உலக நாடுகளுக்கிடையில் நட்புறவோ, நல்லெண்ணமோ வளரமுடியுமா? உலகம் ஒரு குடும்பம் என்றநிலை ஏற்படமுடியுமா?

சீனா ஒரு பெரியநாடு. அதை தனது போக்கில் செல்லவிடுவது உலக அமைதிக்கு நல்லதல்ல. அதுதவறுசெய்யும்போது அதைத்தட்டிக்கேட்பதற்குக்கூட இப்பொழுது வாய்ப்பில்லை. 'தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டனவான்' என்பது பழமொழி. சீனாவின் நிலையும் இப்படித்தானிருக்கிறது. இதனால்தான் சீனாவையும் ஐ.நா.வில் சேர்க்கவேண்டியது அவசியமாகிறது. அமெரிக்காவும் மற்றையோரும் [illegible] வது இதை உணர [illegible] டும்.

சிரமதானம்

## 5 நாட்களில் வீதி திருத்தினர்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கு மத்தொனி வட்டாரத்தில் இதுவரை காலமும் கவனிப்பாரற்றுக்கிடந்த உச்சில்தெரு, மத்தொனி திருவள்ளுவர் சனசமூகநிலையத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாகசிரமதானம்மூலம் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இச் சனசமூகநிலையத்தைச் சேர்ந்த சுமார் நூற்றுக் கதிகமான வாலிபர்களும், மற்றவர்களும் இச் சிரமதானத்தில் கலந்துகொண்டனர். கட்டைவேலி கிராம முன்னேற்றச்சங்கமும்இதில் பங்கு கொண்டது. திருவள்ளுவர் சனசமூகநிலையத் தலைவர் திரு.வா. ஆழ்வாப்பிள்ளை, இணைக்காரியதரிசிகள்- ஆ. வன்னியசிங்கம், க. நாகமுத்து ஆகியோரின் முயற்சியால் உருவான இச் சிரமதானப்பணியில் பிரதம விருந்தினராக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி திரு. செல்லையா, கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். 5 நாட்களுள் திருத்த வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

# "தமிழ்பலகலைக்கழகம் கிடையாது; மாவட்டசபையும் இல்லை"

## கோண்டாவில் கூட்டத்தில் ஜி. ஜி.

உடுவில், வெள்ளி

"தமிழ்ப்பல்கலைக்கழகம் என்று ஒன்று உருவாகுவது சாத்தியமில்லை" என்று கோண்டாவில் மேற்கில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய யாழ்ப்பாணம் எம்.பி. யும் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

சிங்களம் மட்டும் சட்டத்தினால் வேலையிழந்த அரசாங்க ஊழியர்சங்க ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஜி. ஜி.பொன்னம்பலம் பேசியதாவது:

தமிழ்இனம் உயர்வதாய் இருந்தால் இன்றைய நிலையில் கல்வியறிவால்தான் உயரமுடியும். அத்தகைய உயர்வுபெறக்கூடிய உயர் கல்வியைப்பெற எமதுதமிழ் மாணவர்கள் கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் படும் கஷ்டத்தைக் கண்டு தான் நான் இராமநாதன், பரமேஸ்வராக் கல்லூரிகளை இந்துப்பல்கலைக் கழகமாக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டேன். பல்கலைக்கழகத்துக்கு வேண்டிய சகல வசதிகளும் இங்கு இருக்கின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்குவதில் உயர்கல்விச் சபைக்கு விருப்பம் இல்லை. தமிழ்ப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, தமிழரசோ, சமஷ்டியோ அல்லது மாவட்டசபைகள் தன்னும் கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

வேலையிழந்த அரசாங்க ஊழியர்சங்கத்தலைவர் திரு. எஸ். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

புத்தி சொல்லப் புறப்படுபவர்கள் தமது புத்திமதியால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் ஏற்று அதற்குப் பரிகாரம் தேடும் வல்லமை பெற்றிருக்கவேண்டும். சிங்களம் படியாதே என புத்தி கூறியவர்கள் இன்று தமது புத்திக்தியால் பாதிக்கப்பட்ட சுமார் 2000பேருக்கு மேற்கொண்டு வழிகாட்ட ஏன் பின்னிற்கிறார்கள்? வெற்றிதோல்வி நமது கையில் இல்லை. ஆனால் எடுத்த காரியத்தை நிறைவேற்றப்பாடுபடுவது தான் முக்கியம். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு ஒரு நேரத்தில் எதைப்பெறலாம், எதைப் பெறமுடியாது என்பதை சிந்தித்து செயலாற்றவேண்டும்.

கொக்குவில் கிராமசபைத் தலைவர் திரு. சி. என். அருளம்பலம் பேசியதாவது:

1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்கசேவையில் சேர்ந்ததவர்கள் சிங்களம் படிக்கவேண்டிய அவசியம் இல்லையென்ற கொள்கையை காலம்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா ஏற்கும்படி திரு. பொன்னம்பலம் செய்தார். இந்தக்கொள்கை காப்பாற்றப் படாவிட்டால் இனிவரும் எந்த அரசியல் கட்சியும் தரும் எந்த ஒரு வாக்குறுதியும் பயனற்றதாகிவிடும் என்பது திண்ணம்.

திருவாளர்கள் மு. மகாலிங்கம், எஸ். ஏ. முருகையா, ஆசிரியர் வன்னியசிங்கம் ஆகியோருட்பட வேறுபலரும் பேசினார்கள்.

## மண்வெட்டி

இமையாணன், வெள்ளி

இமையாணன் ஐக்கிய பண்டசாலைக்கு, மக்களுக்கு விநியோகம் செய்வதற்கென இருபது மண்வெட்டிகள் வழங்கப்பட்டன. இதனைப் பெறுவதில் மக்களிடையே பலத்த போட்டி ஏற்படவே சங்க அங்கத்தவர்களுக்கு மட்டுமே இவற்றை வழங்குவதெனவும், மண்வெட்டி பெறவிரும்பும் அங்கத்தவர் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் திருவுளச்சீட்டின்மூலம் பிரச்னையைத் தீர்ப்பதெனவும் நிர்வாகிகள் தீர்மானித்தனர்.

ஃ

அராலி, வெள்ளி

இங்குள்ள ஒரு ப. நோ. கூ. சங்கத்தின் அங்கத்தவர் 16 பேருக்கு, சமாசம் மண்வெட்டி வழங்காததால் அவர்கள் மண்வெட்டி தர வேண்டுமென வாதாடினர். இதைத் தொடர்ந்து அச்சங்க நிர்வாக உறுப்பினரில் பலர் தமக்கு மண்வெட்டிகள் இப்போது வேண்டாமென்றும் அடுத்துக் கிடைக்கும் மண்வெட்டிகளில் தமக்குரிய மண்வெட்டிகளைத் தருமாறும் கூறி பிரச்னையைச் சமாளித்தனர்.

## மகாஜனா கல்லூரி

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த பரிசளிப்புவிழா கடும்மழை காரணமாக சென்ற புதன்கிழமை நடைபெறவில்லையெனவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறுமெனவும் கல்லூரி அதிபர் அறிவிக்கிறார்.

காங்கேசன்துறை, வெள்ளி

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி உயர்வகுப்பு மாணவிகள் தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரியில் சிரமதானம்மூலம் பல பணிகளைச் செய்தனர். 30மாணவிகள் இச்சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

## நாட்டிலும் நகரிலும்

இந் நாட்களில் மாலை ஐந்து மணிக்கு கந்தோரிலிருந்து வெளியே வந்தவுடன் அப்போழுதுதான் மூன்று மணி போல ஒரு மயக்கம் ஏற்படுகிறதா? மாலையாகிவிட்டதென்று நீங்கள் நினைக்க சூரியன் இன்னும் உச்சிக்கும் அஸ்தமனத்துக்கும் நடுவே இருப்பது போல் தெரிகிறதல்லவா?

காலையிலும் இப்படித் தான் ஒரு பிரமை உண்டாகிறது. இன்னுமா ஒன்பது மணியாகவில்லை என்று கேட்கத் தோன்றுகிறது. விடிந்து எவ்வளவு நேரமாகிவிட்டது? கடிகாரத்தில் இன்னும் ஒன்பதாகவில்லை. இதேன் இப்படி? சூரியன் ஆகாய பவனி வரும் வேகம், அல்லது பூமி தன்னைத் தானே சுற்றும் வேகம், குறைந்து விட்டதா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

அப்படியொன்றுமில்லை. உங்கள் கடிகாரத்திலும் பிழையில்லை, சூரியனிலும் பிழையில்லை, பூமியிலும் பிழையில்லை.

கோடைக் காலத்தில்பகல் நேரம் அதிகம். மாரியில் இரவு நேரம் அதிகம். தன்னைத் தானே சுற்றும் பூமி இரவு பகலை உண்டாக்குகிறது. அதே சமயத்தில் சூரியனையும் பூமி வலம் வருவதால் கோடை, மாரி என்ற பருவ காலங்கள் உண்டாகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் கோடைக் காலத்தின் உச்சியை இப்பொழுது அணுகிக் கொண்டிருக்கிறோம். வருடத்திலேயே மிகவும் நீளமான பகல்கள் இப்பொழுதுதான்.

உதாரணமாக, இன்று சூரியன் உதிக்கும் நேரம் 5-53. மறையும் நேரம் 6-27. ஆக, பகல் நேரம் 12 மணி 34 நிமிடங்கள். இரவு நேரம் 11 மணி 26 நிமிடங்கள்.

ஜூன் மாதம் 22-ம் திகதிக்குப் பின் பகல் நேரம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வந்து செப்டம்பர் 22-ம் திகதி பகலும் இரவும் ஒரேயளவாயிருக்கும், அதாவது, 12 மணித்தியாலங்கள். அதற்குப் பின் இரவு நேரம் சிறிது சிறிதாக அதிகரித்து டிசம்பர் 22-ம் திகதி பகலைவிட இரவு நேரம் அதிகமாயிருக்கும். அன்று சூரியன் [illegible]-25 க்கு உதித்து 5-51 க்கே அஸ்தமனமாகி விடும். அன்று பகல் ஆக 11 மணி 26 நிமிடங்களே, இரவு நேரம் 12 மணி 34 நிமிடங்கள்.

அப்பொழுது தான் எங்களுக்கு முழு மாரிகாலம். படுக்கையை விட்டு எழும்புவதற்கு முன்னமேயே ஒன்பது மணியாகி விட்டது போல் தோன்றும். பாட்டிமார்கள் 'விடிய முந்தி பொழுது உச்சிக்கு வந்துவிட்ட'தென்று அலுத்துக் கொள்வார்கள். மாலையிலும் பொழுது படமுன்பே இருட்டி விட்டது போல் தோன்றும்.

ஃ ஃ ஃ

தான் காதலித்த பெண்ணுக்காக ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையும் அரச பதவியையும் துறந்து, இங்கிலாந்தில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமே பெரும் அதிர்ச்சியையும் உண்டு பண்ணிய வின்சர் கோமகன், தமது அரசாங்கத்துக்கும் அரச குடும்ப நியதிகளுக்கும் மாறாக தாம் கைப்பிடித்த மனைவியுடன், முப்பது வருடங்களுக்குப் பின் தமது அருமைத் தாய் நாடாகிய இங்கிலாந்து திரும்பியுள்ளார். வேல்ஸ் இளவரசாயிருந்த போது அவருக்கும் ஸ்ரீமதி சிம்ஸன் என்ற விவாகரத்து செய்யப்பட்ட ஒரு சாதாரண அமெரிக்க பெண்ணுக்கு

[3-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

மிடையே தொடர்பு ஏற்பட்டு விட்டது. தந்தையாராகிய ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் இறந்து போக மூத்த புதல்வராகிய வின்சர் எட்டாம் எட்வர்ட் மன்னன் என்றபெயருடன் சிங்காசனம் ஏறினார். ஆனால் முடி சூட்டப்படவில்லை. ஸ்ரீமதி சிம்ஸனையே திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக நின்ற எட்வர்ட் மன்னரை அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த ஸ்டான்லி போல்ட்வினும் பார்லிமெண்டும் அரச பதவியைத் துறக்கும்படி வற்புறுத்தவே, லட்சக் கணக்கான மக்கள் அழுது புலம்ப, ராஜாங்கத்தை தமக்கு நேரே இளையவரான ஆறும் ஜோர்ஜ் மன்னரிடம் ஒப்படைத்து விட்டு ஸ்ரீமதி சிம்ஸனை மணந்து கொண்டு இந்த முப்பது வருட காலமும் பிறநாடுகளில் வாழ்ந்து வந்தார். அவருக்கு வின்சர் கோமகன் என்ற பட்டம் வழங்கப் பட்டது. முப்பது வருடங்களில் தான் எத்தனை மாறுதல்கள்! மனக் காய்ச்சல்கள் எல்லாம் காலப் போக்கில் சொஸ்தமாகி விட்டன. இப்பொழுது மறுபடியும் லண்டன் சேர்ந்து விட்டார்.

[illegible]ட்டாவது எட்வர்ட் காதல் தியாகம் செய்யாவிட்டால் பிரிட்டிஷ் அரசபரம்பரை எப்படி எப்படி இருக்குமோ!

- வழிப்போக்கன்

## கூட்டுறவுதின விழா

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமசத்தினர் சர்வதேசக் கூட்டுறவு தின விழாவை அடுத்த மாதம் 5-ம் திகதி கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய பிரதமர் கொஸிஜின் ஐ. நா. வருகிறார்

## மேற்கு ஆசியா, வியட்னும் பற்றி அவர் ஜோன்சனுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார்

நியூயோர்க், ஜூன் 16

சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் இன்று மாஸ்கோவிலிருந்து நியூயோர்க்குக்குப் புறப்பட்டார். அவர் 15 அங்கத்தவர் அடங்கிய சோவியத் தூதுகோஷ்டி ஒன்றுக்குத் தலைமைதாங்கி, ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டமொன்றில் பங்குபற்ற வருகிறார்.

வரும் வழியில், பாரிஸில் பிரெஞ்சு அதிபர் டிகோலுடன் அவர், மேற்கு ஆசிய நிலைமை பற்றிச் சிறிது நேரம் பேசுவாரெனத் தெரிகிறது.

இங்கு வந்து சேர்ந்ததும் அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சனுடனும் மேற்கு ஆசியா பற்றியும் வியட்னும் சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

'ரஷ்யப்பிரதமர் கொஸிஜினைச் சந்தித்துப் பேசுவதில் அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் மகிழ்ச்சியடைவார்' என அமெரிக்க ராஜாங்கஇலாகா அறிவித்துள்ளது.

## ஐ.நா. பொதுச்சபைகூட்டத்துக்கு அதிகரித்து வரும் ஆதரவு

ஐ. நா. பொதுச்சபையின் அவசரக்கூட்ட மொன்றை அழைக்கவேண்டுமென்ற சோவியத்யூனியனின்கோரிக்கைக்கு, ஐ. நா. வில் அதிக ஆதரவு ஏற்பட்டுவருகிறது. அதன் 122 அங்கத்துவ நாடுகளில் ஏற்கனவே 60 நாடுகள் கூட்டத்துக்கான தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. ஆதரவு தெரிவித்த முதலாவது நாடுகளில் இந்தியாவும் ஒன்ருகும். கூட்டத்தை அழைக்க 52 நாடுகளின் ஆதரவு போதுமானதாகும். கூட்டம் நாளை நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல் துருப்புகளை அராபிய பிராந்தியங்களில் இருந்து வாபஸ்பெறும்படி ரஷ்யா விடுத்த கோரிக்கை, ஐ. நா. பந்தோபஸ்து சபையில், நிராகரிக்கப்பட்டது. இதையடுத்தே ரஷ்யா, பொதுச்சபையின் அவசர கூட்டத்தை அழைக்கக் கோரியிருந்தது. பொதுச்சபைக்கூட்டத்தில், இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெறுவது பற்றி விவாதிக்கப்படும்

பொதுச்சபைக் கூட்டத்துக்கு அமெரிக்கா மட்டுமே ஆட்சேபம் தெரிவித்துள்ளது. ஆனாலும், சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் விரும்பினால், சபையைக் கூட்டுவதுபற்றித் தனக்கு ஆட்சேபனை இல்லையென்றும், கூட்டம் பயனுள்ளதாக அமையவேண்டுமெனத் தான் நம்புவதாகவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

### நீக்ரோவுக்கு உயர் பதவி

வாஷிங்டன், ஜூன் 16

அமெரிக்க உயர் நீதிமன்றத்து நீதியரசர் பதவிக்கு அமெரிக்க சொலிசிட்டர் ஜெனரலான தர்கூட் மார்ஷல் என்பவருடைய பெயரை அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் செவ்வாய்க்கிழமையன்று பிரேரித்தார். அமெரிக்கச் சட்டத்துறையில் அதி உயர்ந்த பதவியை வகிக்கக்கூடிய முதலாவது நீக்ரோ வகுப்பைச் சேர்ந்தவர் இவரே. உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை அண்மையில் ராஜிநாமா செய்த ரொம் சி. கிளார்க் என்பவருடைய இடத்துக்கு மார்ஷல் அவர்களுடைய பெயரை ஜனதிபதி சிபார்சு செய்திருக்கிறார். செனட்டின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பதவியேற்கப்படும்.

---

### 'உலகத்தமிழ் பத்திரிகைகளை காட்சிக்கு வைக்குக'
— பண்டிதர்

யாழ்ப்பாணம், சனி

அடுத்த ஆண்டில் சென்னையில் நடைபெறவிருக்கும் 2-வது உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதிலிருந்தும் வெளியாகும் சகல தமிழ் பத்திரிகைகளையும் காட்சிக்கு வைக்கவேண்டுமென்று கிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள கலைச்சொற் தொகுதிகளையும், காட்சிக்கு வைக்கும்படியும் அவர்கோரியுள்ளார்.

## மே. ஆசிய பிராந்திய எல்லைகளுக்கு பாதுகாப்பு

### பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனதிபதி ஜோன்சன்



வாஷிங்டன், ஜூன் 16

'மேற்கு ஆசிய நாடுகள் அனைத்தும் அரசியல் சுதந்திரம் பெற்று, தங்களுடைய பிராந்திய எல்லைகளை காத்து பாதுகாப்புடன் வாழவேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது. இதற்கு ஆதரவாகவிருப்பதே அமெரிக்காவின்கொள்கையாகும்.' இவ்வாறு ஜனதிபதி ஜோன்சன் அண்மையில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது வெளியிட்டார்.

''இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் கொண்டிருக்கும் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டே, எதிர்கால நிலைமையை உருவாக்க முடியும். இந்த நாடுகள் சுதந்திரமாக வாழ்வதுடன் தமக்கான எல்லைகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடித்து வந்திருக்கிறது. இதே கொள்கையையே மேலும் அமெரிக்கா கடைப்பிடிக்கும்'' என்ருர் ஜனதிபதி.

''இன்றுள்ள நிலைமையில் நெருக்கடிக்குட்பட்டிருக்கும் இந்தப் பிரதேசத்தை யிட்டு நான் எதையும் திட்டவட்டமாகச் சொல்லத்தக்க நிலையில்இல்லை. ஆகவே அமெரிக்காவின் கொள்கையை மட்டுமே நான் வெளியிட விரும்புகிறேன்.

**'சமாதானமே எமது நோக்கம்'**

''மேற்கு ஆசியாவில் சமாதானம் நிலவவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இனிமேல் நடைபெறவிருக்கின்ற சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டே, இந்தப் பிரதேசத்தில் சமாதானம் உண்டாக வழி ஏற்படும்'' என்று ஜனதிபதி ஜோன்சன் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

'மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுவதற்கு சோவியத் யூனியனுடனும் அமெரிக்கா இணைந்து செயற்படுமா' என்று பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது ஜனதிபதி, ''எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க சமாதானம் உண்டாக்குவதற்கு, சகல நாடுகளும ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றே நாம் கருதுகிருேம்'' என்ருர்.

அரபு நாடுகளுடன் துண்டிக்கப்பட்ட உறவு மீண்டும் புதுப்பிக்கப்படுமா என்றும் கேட்டார்கள். இதற்குப் பதிலளிக்கும் போது, ''இன்றுள்ள நிலைமைகள் ஒருவாறு அடங்கட்டும். உண்மையில் நடைபெற்ற சம்பவங்களை சம்பந்தப்பட்ட நாடுகளும் உலகமும் உணரட்டும். இதன் பின்னர் மேற்கொண்டு ஆக வேண்டியவற்றையிட்டு யோசிக்கலாம்'' என்று ஜனதிபதி சொன்னார். இச்சந்தர்ப்பத்தில் உடனடியாக எந்த முடிவும் ஏற்பட வாய்ப்பில்லை என்று அவர் மேலும் சொன்னார்.

## மேற்கு நாடுகளுக்கெதிராக அரபு நாடுகள் நடவடிக்கை

லிபியா அரசாங்கம், லிபியாவிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் தளங்களை மூடிவிட்டு, அங்குள்ள அவற்றின் துருப்புகளை உடனடியாக வாபஸ்பெறுமாறு இருநாடுகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

ஈராக்மந்திரிசபையின் அவசர கூட்டமொன்றில்,அமெரிக்க, பிரிட்டிஷ், மேற்கு ஜெர்மன் பொருள்களைப் பகிஷ்கரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொருட்களில் டெலிவிஷன் கருவிகளும் அடங்கும்.

சிரியாவிலுள்ள சகல அமெரிக்க,பிரிட்டிஷ்,மேற்கு ஜெர்மன் பள்ளிக்கூடங்களையும், கலாச்சாரநிலையங்களையும் மூடும்படி சிரிய அரசாங்கம்உத்தரவிட்டுள்ளது.

சூயஸ்கால்வாயில் நான்கு பிரிட்டிஷ்கப்பல்கள் தடுத்து நிறுத்தப்பட்டதையிட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் ஐ.அ. குடியரசிடம் ஆட்சேபித்துள்ளது.

சூயஸ்கால்வாய் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதையிட்டு அமெரிக்கா தனது கவலையைத் தெரிவித்துள்ளது. மற்ற நாடுகளின் உதவியைப் பெற்று, கால்வாயை விரைவில் திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதென அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இரண்டு அமெரிக்கக் கப்பல்கள் சூயஸ்கால்வாயில் தடுத்துநிறுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, இந்தியாவுக்கு கோதுமை கொண்டு செல்லும் கப்பலாகும்.

இந்தியாவுக்குப் பொருள் கொண்டு செல்லும் கப்பல்களை இந்தியா செயித் துறைமுகத்துக்கு வரவழைத்து, அங்கிருந்து செங்கடல் வழியாக இந்தியாவுக்குச்செல்ல வழிவகுக்கலாமென இந்தியாவுக்கு ஐ. அ. குடியரசு ஆலோசனை கூறியுள்ளது.

## திட்டமிட்ட கொலை புரிவதாக இஸ்ரேல் மீது புகார்

ஐ. அ. கு. துருப்புகளை இஸ்ரேல் திட்டமிடப்பட்ட கொலை புரிவதாக ஐ. அ. குடியரசு ஜெனீவாவில் குற்றஞ்சாட்டியுள்ளது. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிலையத்தை சினய் பகுதியில் இயங்க முடியாதவாறு இஸ்ரேல் தடைசெய்துள்ளதாக கெய்ரோ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்கு ஆசியப் போரின் விளைவாக, 45,000க்கும் அதிகமான சிரியர்கள் வீடு இழந்துள்ளதாக சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளதாகவும் அவை கூறின.

அரபிய பெண்களையும், குழந்தைகளையும் இஸ்ரேல் பகிரங்கமாகக் கொலைசெய்வதாக சோவியத்பத்திரிகை 'இஸ்வெத்தியா' குற்றம் சாட்டியுள்ளது.

### ஐ.அ. கு. வுக்கு ரஷ்ய ஆயுத உதவி

நூற்றுக்கதிகமான சோவியத் சூப்பர் சோனிக் 'மிக்' ஜெட் விமானங்களை ரஷ்யா ஐ. அ. கு. வுக்கு அனுப்பியுள்ளதாக யூகோஸ்லாவிய செய்தித்தாபனமொன்று அறிவிக்கிறது. ஆயுதங்கள் கொண்ட ரஷ்ய கப்பல்களும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வந்து சேர்ந்துள்ளதாக அச் செய்தித்தாபனம் மேலும்கூறுகிறது.

### இந்தியாவுக்கு நஷ்டஈடு

ஐ.நா. அவசரகால படையில் சேவையாற்றும்போது இஸ்ரேலின் தாக்குதலின் விளைவாகக் கொல்லப்பட்ட அல்லது காயப்பட்ட இந்திய வீரர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு அளிக்க இஸ்ரேல் முன்வந்துள்ளது. தாக்குதல் சம்பவத்துக்காக அது தனது மனவருத்தத்தையும் இந்தியாவிடம் தெரிவித்துள்ளது. இந்திய வெளிவிவகார மந்திரிக்கு விலாசமிடப்பட்ட கடிதமொன்றில் இஸ்ரேல் தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## சீன தூதரகத்துக்கு பொலீஸ் காவல்

### இந்தியா நாடுகடத்திய தூதுவர் வெளியேறவில்லை

புதுடில்லி. ஜூன் 16

புதுடில்லியிலுள்ள சீனத் தூதராலயத்தைப் பொலிசார் தொடர்ந்து காவல்புரிந்து வருகிறார்கள்.

நேற்று சீனத் தூதராலயத்திலிருந்து அதிவிரைவாகப் புறப்பட்ட கார் ஒன்று, அதைத் தடுத்துநிறுத்த முன்னர், அண்மையிலுள்ள பாகிஸ்தான் தூதரகக் கட்டிடத்துக்குள் விரைந்து சென்றது.

இந்தியா நாடு கடத்திய இரு சீனத் தூதரகப் பிரதிநிதிகளும் இன்னும் இந்திய அரசாங்கத்தின் உத்தரவை ஏற்கவில்லை.

ஆனல் அவர்கள் இருவரையும் சீனவுக்குத்திருப்பியழைக்கச் சீன அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாகப் பீகிங் வானொலி தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் இவர்களை நாடு கடத்தியதையொட்டி சீன இந்தியாவுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகவும் வானொலி குறிப்பிட்டது.

சீனவிலிருந்து நாடுகடத்தப்பட்ட இரு இந்தியத் தூதரகப் பிரதிநிதிகளும்

[4-ம் பக்கம் பார்க்க]

**வடபகுதியில்**

# 600 ஏக்கரில் உருளைக்கிழங்கு

## விவசாயப் பகுதி திட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்குப்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்யும்நோக்கமாக யாழ்ப்பாண விவசாயப் பகுதி உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையை 4 மடங்காக உயர்த்தத்திட்டமிட்டுள்ளது. வடபகுதியில் உருளைக்கிழங்குத் தட்டுப்பாட்டை நீக்கும்நோக்கமாகவேகூடிய நிலத்தில் பயிர் செய்யத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சென்ற வருடம் 130 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட உருளைக்கிழங்கை இவ்வருடம் 600 ஏக்கரில் பயிர் செய்யவிருப்பதாகவும், உருளைக்கிழங்கு பயிரிட்ட நிலத்தில் வெண்காயம் பயிரிட்டால் நல்ல பலனை அளிக்குமென்றும் பனிப்புழுவினால் வெங்காயம் பாதிக்கப்படாமலிருக்க முறையான நல்ல மருந்துவகைகள்மூலம் வெங்காயத்தைக் காப்பாற்றிவிடலாமென்றும், எதிர்காலத்தில் உருளைக்கிழங்கை இரு போகமாகப் பயிரிட விவசாயப்பகுதிதிட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.


ராதா மணிமார்க்

**சந்தனாதித் தைலம்**

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்

(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரேட். பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


## சிரமதானம் செய்யமுடிவு

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கு மத்தொனி திருவள்ளுவர் சனசமூகநிலைய புதுவருட உத்தியோகத்தர்தெரிவு ஆசிரியர் வா. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. வள்ளுவன்இல்லறம்என்னும் பொருள்பற்றி ஒரு பேச்சுப்போட்டி நடாத்துவதெனவும், நாடகம், கிராமிய நடனம்ஆகிய கலா நிகழ்ச்சிகள் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. சீர்செய்யப்படாத ஒழுங்கைகளையும், பாவிப்பாரற்றுக் கிடக்கும் குளம், கிணறுகளையும் சிரமதானமூலம்திருத்தியமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. தலைவராக திரு. வா. ஆழ்வாப்பிள்ளையும், இணைக்காரியதரிசிகளாக திருவாளர்கள் ஆ.வன்னியசிங்கம், க. நாகமுத்துவும் தெரிவு செய்யப்பட்டனர்.

— —

## சீன தூதரகத்துக்கு..

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நாளை புதுடில்லி வந்துசேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ரகுநாத் சம்பவம்**

இந்தியப் பிரதிநிதி திரு. ரகுநாத் சீனவில் துன்புறுத்தப்பட்டதை, இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சாக்ளா, நேற்று லோக சபையில் விபரமாகக் கூறினார். பீகிங் விமானநிலையத்தில், திறந்த லொறியொன்றில் திரு ரகுநாத் நிறுத்தப்பட்டு, பொதுமக்கள்முன்னிலையில் சுற்றிக்கொண்டு செல்லப்பட்டாரென திரு. சாக்ளா கூறினார். அத்துடன் திரு. ரகுநாத் மீது சப்பாத்துக்கள் எறியப்பட்டதுடன், தடிகளினாலும் அவர் அடிக்கப்பட்டார்.

**கண்டனம்**

நேற்றுப் புதுடில்லியில் கூடிய உலக சமாதான கவுன்சில், இந்தியப் பிரதிநிதிகளைச் சீன நடத்திய முறையைக் கடுமையாக ஆட்சேபித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. சர்வதேச நடைமுறை, சட்டம் இவற்றுக்கு மாருக, மிகவும் பண்பற்ற முறையில் சீன நடந்துகொண்டதாகவும், சீனவின் நடத்தையால் ஆசிய—ஆகிரிக்க உறுதிப்பாடு குலைந்துவருவதாகவும் அத்தீர்மானம் குறிப்பிட்டது.

# 'சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும்'

**—ராஜாங்க மந்திரி**

கொழும்பு, வெள்ளி

'நாட்டில் சமாதானமும் சகலஇன மக்களிடையே ஒற்றுமையும் ஏற்படுவதற்கு சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று அரசாங்கத்தின் பதில் தலைவரும், ராஜாங்க அமைச்சருமான திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தன கொழும்பு ரேயல் கல்லூரி மண்டபத்தில் சென்றபுதன்கிழமை நடைபெற்ற சட்ட பாதுகாப்புத்தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ராஜாங்க அமைச்சர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

சட்ட பாதுகாப்புத்தினத்தைக்கொண்டாடுவதன்முக்கிய நோக்கங்கள் மூன்று. இளைஞர்கள் மத்தியில் சுதந்திரத்தை ஏற்படுத்தி அவர்களைச் சரிவர வழிநடாத்துவது; சட்டத்தின்மூலம் சகல மக்களுக்கும் உரிமைவழங்குவது என்பனதாம்அவை இப்படியான சட்ட பாதுகாப்பு தினத்தை ஒழுங்குசெய்து நடாத்தும் வழக்கறிஞர் சங்கம் உயர்ந்தளவு மதிப்பும் மரியாதையும் சட்டத்துக்குக் கொடுக்கவேண்டும். இ 'நாட்டில்வழ்ந்து' ஒவ்வொரு மனிதரும் மனிதாபிமானத்துடன் வாழும் சகல இனங்களிடையேயும் ஒற்றுமையை நிலைகொள்ளச் செய்து, சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்படுவதற்கு உதவியளிக்கவேண்டும்.

நீதிமந்திரி திரு. விஜயமானே பேசுகையில், மனித இனங்களிடையே சமாதானமும், சகவாழ்வும் ஏற்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் சட்டத்துக்கு மதிப்பளிக்கவேண்டுமென்ருர்.

திரு. ரி. ஸ்ரீராமநாதன், திரு. எஸ். ஹரிஹரஐயர் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

— —

## சிரமதானம்

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசுநாயனர் வித்தியாசாலைமாணவர்கள் ஆசிரியை திருமதி த. தங்கரத்தினம் தலைமையில் சென்ற சனிக்கிழமை இப்பகுதியிலுள்ள வீதிகளையும், வாசிகசாலை வளவையும் சிரமதான மூலம் துப்புரவு செய்தார்கள்.

—

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**சனி 17-6-67**

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 இன்றையநிகழ்ச்சிகள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் மன்றம்.

இரவு 6-15 வயலின், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம்—மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.





பூரண இன்பம்!

**திருப்தி!**

திருப்தி தரும் பூரணமான இன்பம்; பக்குவம் முதிர்ந்த, வேர்ஜினியா புகையிலை ரகங்களின் செறிந்த சுவை - திறீ ரோஸஸ் தரும் உத்தரவாதம் இவையே.



இலங்கையின் அபிமானத்தை

**திறீ ரோஸஸ்**

பெற்றது இதனால் தான்

இலங்கையில் தயாரிப்போர்:

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்.

CTC-58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திலே,

கொழும்பு 4, மெல்போர்ன் வீதி, 26-ம் இலக்கத்தில் வசிக்கும் செல்லையா துரைசிங்கம் வாதி இல: எம்/3298

எதிராக

1. எஸ். ஜி. அரசரெட்ணம், நல்லூர் பயிற்சிக் கல்லூரி, நல்லூர்.
2. எஸ். ஸ்ரீ நிவாசன், அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.
3. டாக்டர் B. செல்லையா, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

இலங்கை-அமெரிக்கா சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் [முறையே].

பிரதிவாதிகள்

மேற்குறித்த பிரதிவாதிகளுக் கெதிராக, வீட்டு வாடகைப் பணம் ரூ.4650/- அறவிடும் பொருட்டும், யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெரு, 16-ம் இலக்க வீட்டிலுள்ள பொருட்களை அகற்றுவண்ணம் இடைக்காலத்தடையுத்தரவு கேட்டும் குறித்த வழக்குத் தொடரப் பட்டிருப்பதால் 1967-ம்ஆ ஆடி மீ 18-ந் உ நீதிமன்றத்தில் பிரசன்னமாகும்படி பிரதிவாதிகளுக் கெதிராகக் கட்டளையும், குறித்த பொருட்களை அகற்றுவண்ணம் இடைக்காலத் தடையுத்தரவும்குறித்த நீதிமன்றத்திஞல் பிறப்பிக்கப் பட்டுள்ளதென இத்தால் விளம்பரப் படுத்துகிறேன்.

எ. கோமர் வன்னியசிங்கம்,
வாதியின் வழக்கறிஞர்.
பிரதான வீதி,
யாழ்ப்பாணம். 2352

## ஏல விற்பனை

யாழ்ப்பாண மாநகரசபை பொதுக்களஞ்சியத்தில் 20-6-67-ம் திகதி காலை 10 மணிக்கு பழைய சாமான்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏனைய விபரங்களை பொதுக்களஞ்சியத்தில் அறிந்துகொள்ளலாம்.

கட்சன் செல்வராசா,
ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
14-6-67 2357

## கேள்வி விளம்பரம்

### முள்ளிப்பற்று கிராமசபை

சங்கத்தார் வயல் ரோட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 27-6-67-ந் திகதி காலை 10 மணிவரையும் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். வேலை விபரமரண்டர் பத்திரம் ரூபா 50/- கட்டி 25-6-67-ந் திகதி பிற்பகல் 12 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். வேலைவிபரங்கள் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/- கட்டிப்பெறவேண்டும். அப்பணம் திருப்பிக்கொடுபட மாட்டாது.

ந. கார்த்திகேசு,
அக்கிராசனர் கி. ச.
முள்ளிப்பற்று, இயக்கச்சி.
2358

கொழும்பு, வெள்ளி

ஸ்தலஸ்தாபன வர்த்தக யூனியன்கள்நேற்று கொழும்பில் கூடி 17 பொதுக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டது. விசேஷ வாழ்க்கைப்படி ரூ.30/-மாதாமாதம் ஊழியர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது இக் கோரிக்கைகளில் முக்கியமானதொன்று.

## அலங்காரத் திருவிழா

ஊர்காவற்றுறை, வியா.

சரவணை-பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் சென்ற ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமையுடன் உற்சவம் முடிவடையும்.

உற்சவ நாட்களில் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையார் விசேடகூட்டுப்பிரார்த்தனைகளை நடாத்தி வருகின்றனர்.

## சப்பாத்துக்குள் வைரக் கற்க்ள்

கொழும்பு, வெள்ளி

வெளிநாட்டிலிருந்து வந்த சப்பாத்துப் பார்சல் ஒன்றுக்குள் வைரக்கற்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. கொழும்பிலுள்ள பெண்மணி ஒருவருக்குவிலாசமிடப்பட்டிருந்த அந்தப் பார்சல் அந்தப் பெண்மணியின் முன்னிலையிலேயே டியூக் வீதியிலுள்ள பார்சல் அலுவலகத்தில் உடைக்கப்பட்டபோது மூன்று சோடி சப்பாத்துக்களுடன் வைரக்கற்கள்இருந்தனவாம். குறிப்பிட்டபார்சல் பெய்ரூத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. தனது 'ஆண் நண்பர்' ஒருவர் அந்தப் பார்சலை அனுப்பியதாக அப் பெண்மணி தெரிவித்தார். சப்பாத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுடன் ரூ.2,000அபராதமும் விதிக்கப்பட்டது.

## விளையாட்டுப் போட்டி

காங்கேசன்துறை, வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளைசனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. கடந்த 14ந் திகதிநடைபெறவிருந்த இப்போட்டிகள் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோழிகள்!

கேரும் பேடு ரூபா15/- கூவும் சேவல் ரூபா6/- ஒரு மாசப்பேடு ரூபா4/-முட்டைதாங்கி[EggTray] -/75சதம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1883

கார்:

லொறி

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் டீசல் [மொக்கன் மொடல்] லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விக்ரேஸ், 6, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2439

காணி:

சரசாலை வடக்கிலுள்ள மாத்தளாயக்காடு (புளியடித்தோட்டம்) என்னும் 10 பரப்பு தோட்டக்காணி தனிக்கிணறுடன் விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசதாரருடன் தொடர்புகொள்ளவும்: கதிரவேலு முருகேசர், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. 2445

காணி:

யாழ்ப்பாண நகரில் நாலுபுறமும் மதில் சுவரும் கிணறுமுள்ள ஆறுபரப்புக் காணி முழுவதும் முப்பதாயிரம் அல்லது விலை கேட்கவும். அரைவாசியும் வாங்கலாம். நேரில்வரவும். உரிமையாளர்: இ. செல்லதுரை, 271, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. 2446

## தேவை

லொறிச் சாரதிகள்!

தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு லொறிச் சாரதிகள் தேவை. சான்றிதழ்களுடன் 25-6-67-ம் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். நிர்வாகக்காரியதரிசி, தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், ஊர்காவற்றுறை. 2448

## வயோதிபர் தற்கொலை

காங்கேசன்துறை, வெள்ளி

தமது பேரன் பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வில் திருப்திகரமான சித்திபெறவில்லையென்ற காரணத்தால் இளையதம்பி தாமர் [74] என்ற வயோதிபர் திருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். சாட்சியங்களின்பின் பதில் மரண விசாரணை அதிகாரி திரு. ம. சி. தாமோதரம்பிள்ளை தற்கொலையெனத்தீர்ப்பளித்தார்.

## 'பாலம் அமைக்குக'

பூநகரி, வெள்ளி

சங்குப்பிட்டி— கேரதீவுக் கடலை மூடி பாலம் அமைப்பதன் மூலம் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்கவேண்டும் என்று பூநகரிமக்கள்போக்குவரத்து மந்திரியையும் எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தையும் கடித மூலம் கேட்டுள்ளனர்.


SATHYALYAN'S
**ASTHMA DROPS**
அஸ்மாட்றேப்ஸ்



இளைப்பு [ஆஸ்த்மா] நோயை விரைவில் சுகப்படுத்தும் நவீன மருந்து. நானுவிதமான இருமல்கள், க்ஷயரோகம், நெஞ்சுச்சளி, [ப்ரொங்கைடீஸ் முதலியவைகளுக்கும் சிறந்தது. ஊசி மருந்தாலும் Injection தற்கால சாந்தியாவதும் செய்ய முடியாதபடி மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்கும், மிகக் கடுமையான நிலைமையிலும், இம்மருந்தை ஒருமுறை கொடுத்தாலும் குணம் கிடைக்கிறது. பொறுக்க முடியாத வருத்தங்களையும், துன்பங்களையும் உண்டாக்கும் இக் கொடிய வியாதியை [ஆஸ்த்மா] நீண்ட காலமாகாமலிருந்தால் விரைவிலும், மிகவும் நாள்பட்டவைகளாலும் சில வாரங்கள் தொடர்ந்து சாப்பிடுவதாலும், திரும்பி வராதபடி சம்பூரணமாகக் குணப்படுத்துகிறது. ஆஸ்த்மா வியாதிக்கு இது ஒரு சிறந்த மருந்து என்பதைப் பாவிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்.

அளவு:- 15—20—சொட்டுகள் தினம் இருமுறை.

விலை. 1 அவுன்ஸ்-
ரூ. 7 -- ச. 50

குறிப்பு: எல்லாவித வியாதிகளுக்கும் வைத்தியம்செய்யப்படும்.

வடமாகாண ஏஜன்டுகள்:-

எஸ். சுப்பிரமணியம் & கோ,
53, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ்,
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

க. செ. கணபதிப்பிள்ளை & சன்ஸ்,
51, கே. கே. எஸ். ரோட்
யாழ்ப்பாணம்.

ஆ. இராசையா & சன்ஸ்,
69, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80, புதுச்செட்டித் தெரு
கொழும்பு-13.



## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரோஸ் [பாம்பன்கடை]

தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] மொடேர்ன் [பதுளை]

மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] தீவொளி [நுவரெலியா]

கல்யாணி [நாவலப்பிட்டி]

ஆகிய திரைகளில்

தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு! தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!

பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!

நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிகராணி **கே. ஆர். விஜயா,**
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்ஸ்

# செல்வம்


## 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி

# பாஷையூர் பிரிவு சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கழகங்களுக்கிடையேயான 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் பாஷையூர் சென். அந்தனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற கடுமையான உதைபந்தாட்ட மோதலில் நாவாந்துறையைத் தோற்கடித்த பாஷையூர்க் கோஷ்டி பிரிவு சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் காரசாரமான பலப்பரீட்சையில் ஈடுபட்ட இரு கோஷ்டியினரதும் ரசிப்பான அருமையான ஆட்டத்தை நூற்றுக்கணக்கான ரசிகர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் பாஷையூர்கோஷ்டியேமுதல் முதலாகஒருகோலைவிளாசித் தள்ளியது. இதை அடுத்து நாவாந்துறையும் ஒரு கோலை அருமையாகப்போட்டது. இடைவேளையின் போது இருசாராரும் ஆளுக்கு ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப்பின்னர் நடைபெற்ற போட்டியில் முதல் 5 நிமிடங்களுக்குள் பாஷையூர் ஒருகோலைப்போட்டது. சிறிதுநேரத்தில் சூட்டோடு சூடாக மேலும் ஒரு கோலை வெளுத்துவாங்கியது. நாவாந்துறைக்கோஷ்டியும் தம்மால் இயன்றவரை விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டது பாராட்டக்கூடியது. இப்போட்டி முடிவில்பாஷையூர் 3—1கோல்களால் நாவாந்துறையை வென்றது. இச்சுற்றுப்போட்டியின் சாம்பியன்போட்டி குருநகர் யுனைட்டெட்கோஷ்டிக்கும் பாஷையூர் சென். அந்தனிஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெறும்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
FROM
CHINA with LOVE

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த
தூக்கு தூக்கி

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி கணேசன்
லலிதா
நடித்த
வள்ளியின் செல்வன்

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Norman Wisdom
in
STITCH IN
TIME


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரந்தன்**

# ரசாயன தொழிற்சாலையில் ரூ. $1\frac{1}{2}$ லட்சம் வீண்?

— நமது நிருபர் வி. நவரத்தினராஜா —

காங்கேசன்துறை, வெள்ளி

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் 65,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட சுண்ணும்பு சூளைக்கான கட்டடம் கட்டப்பட்டு பல மாத காலமாகியும் இன்னமும் திறக்கப்படாது மூடப்பட்டிருப்பதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இது பற்றி பரந்தன் ரசாயனத் தொழிலாளர் சங்கம் கைத்தொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரவிருக்கிறது.

40,000 ரூபா செலவில் கட்டப்பட்ட கிணறு உபயோகிக்கப்படாது மூடப்பட்டிருப்பதாகவும் 15,000 ரூபாவுக்கு வாங்கப்பட்டு 10,000 ரூபா செலவுசெய்யப்பட்டு திருத்தப்பட்ட 'நாசையிற்றர் கொம்பிறெசர்' என்ற இயந்திரம் பாவிக்கப்படாது எவ்வித பிரயோசனமுமற்றுக் கிடப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் தற்போது துருப்பிடித்த நிலையிலிருப்பதாகவும் தெரிகிறது.

ஒரு தொன் நிறையுள்ள 20 சிலிண்டர்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொழும்பில் அவற்றை வைத்திருப்பதால் குதவாடையாக ரசாயனத் தொழிற்சாலை ரூ. 20,000 இதுவரை செலவு செய்துள்ளதாம்.

ரசாயனத் தொழிற்சாலையில் ஒரு சிறியபிழை ஏற்பட்டாலும் வெளிநாட்டிலிருந்தே நிபுணர் வரவேண்டியிருப்பதாகவும் இதனால் தொழிற்சாலைக்கு அதிக செலவு ஏற்படுவதாகவும் தெரிகிறது.

இவற்றோடு இங்குள்ள தொழிலாளர்கள் திருப்தியற்ற சூழ்நிலையில் கடமையாற்றுவதாகவும் கூறப்படுகிறது. இவை சம்பந்தமாக பகிரங்க விசாரணை ஒன்றை நடத்தவேண்டுமென பரந்தன் ரசாயனத் தொழிலாளர் சங்கத்தினர் விரைவில் கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனாவைச் சந்தித்துக் கோரவிருப்பதாக அறியப்படுகிறது.

**நுணுவில் கொலை முயற்சி வழக்கு**

# எதிரிக்கு இரு வருட நன்னடத்தை பாதுகாப்பு

யாழ்ப்பாணம், சனி

நன்னடத்தைப் பாதுகாப்பு கட்டளைப் பிரதி தமிழில் வேண்டுமென நுணுவில் கொலை முயற்சி வழக்கில் பாதுகாப்புக் கண்காணிப்பில் சென்ற 20 வயதான பழனி செல்வராசா கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து அவருக்குப் பிரதி தமிழ் மொழியில் வழங்கப்பட்டது.

நுணுவில் கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு.வி.தென்னக்கோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரி படுகாயம் விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை 2 வருட நன்னடத்தைப் பாதுகாப்புக் கண்காணிப்பில் செல்ல உத்தரவிட்டார்.

பாதுகாப்புக் கட்டளைப் பிரதி எந்த மொழியில் வேண்டுமென கேட்டபோது எதிரி தமிழ் மொழியில் வேண்டுமென்றார். அப்பிரதி அவருக்குத் தமிழ் மொழியில் வழங்கப்பட்டது. 500 ரூபா பொறுப்பில் அவர் 2 வருட நன்னடத்தைப் பாதுகாப்புக் கண்காணிப்பில் சென்றார்.

இவ்வழக்கில் 66-ம்ஆண்டு ஏப்ரல் 6-ம் திகதி நுணுவிலில் கணபதிப்பிள்ளை ராசரத்தினம் என்பவரை பழனி செல்வராசா கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்து.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் விக்னராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## தேவை

வேலை

சைக்கிள், தையல்மெஷின் பழுதுபார்ப்பதில் அனுபவமும் திறமையுமுடைய மணமான நடுத்தர வயதுடைய இலங்கைத் தமிழருக்கு வேலை தேவை. K. குமாரசாமி, 30/30 சித்திவிநாயகர் கோவிலடி, அரியாலை.

2435

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூன் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கைத் துப்பாக்கி வைத்திருந்தார்

### அபராதம் 200 ரூபா

யாழ்ப்பாணம், சனி

சைக்கிள் களவைக் கண்டு பிடிக்கப்போனபோது அங்கு லைசென்ஸ் இல்லாத கைத் துப்பாக்கியைக் கண்டுபிடித்தனர் பொலிஸார். யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் சார்ஜண்ட் கனகரத்தினம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இதனைக் கண்டுபிடித்தது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாண மாநகரசபையில் 'லைன்ஸ்மனு'க் கடமையாற்றும் கோண்டாவிலைச் சேர்ந்த நாகமுத்து கனகையா, அவரது மனைவி பேரின்பவதி ஆகிய இருவர் மீதும் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, நேற்று யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. மொகமட் ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது பேரின்பவதி தான் குற்றவாளியெனத் தெரிவித்ததால் அவருக்கு நீதவான் 200 ரூபா அபராதம் விதித்தார். ந. நி

### உடுவில் கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், சனி

உடுவில் கொலை முயற்சி வழக்கு விசாரணை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் நேற்று ஆரம்பமானது.

## நிலைமையை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படும் நிதியையும் அவ்வாறே, பொதுமக்களின் சௌகரியத்துக்காகச் செலவு செய்கிறோம். பட்டின சபை முன்னேற்றத்துக்காக உழைக்கும் தொழிலாளர் அனைவருக்கும் கிடைக்கவேண்டிய சகல சலுகைகளும் வழங்குவது எங்கள் கடமை. அனைவருக்கும் கிடைக்கவேண்டிய சலுகையை இப்பட்டினசபை வழங்கிவருகிறது. தொழிலாளர் தலைவன் என்ற முறையில் நான் இச்சலுகைகள்பெற்றுக்கொடுத்ததில் மகிழ்வுறுகிறேன், நகரசுத்தித் தொழிலாளரும் கடமையுணர்வுடன் எட்டு மணி வேலைசெய்து கட்டுப்பாட்டுடன் நடந்தால் அவர்களுக்கு வேண்டியதை சபையுடன் கலந்து உத்தரவு பெற்றுக்கொடுப்பேன்''

இவ்வாறு சுன்னாகம் பட்டின சபை நகரசுத்தித் தொழிலாளரின் வேலைநிறுத்தம்பற்றி பொதுமக்களுக்கு பட்டின சபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் துண்டுப்பிரசுர மூலம் விளக்கியுள்ளார்,

யாழ்ப்பாணம், சனி

கடந்த நான்கு இரவுகளில் 171 வாலிபர்கள் யாழ்ப்பாணம் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் வெளிச்சமின்றியும், இருவராகவும் வீதிகளில் சைக்கிள் ஓடியதாகவும், சந்திகளிலும், வீதி ஓரங்களிலும் கூட்டமாக நின்று வீதியால் செல்லும் பெண்களை நையாண்டி செய்ததாகவும் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய சுவீப்

1-ம்பக்கத் தொடர்ச்சி]

தலா 545 ரூபாய் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 17 C 0506 | 15 M 0048 |
| 14 S 0313 | 16 C 0932 |
| 01 R 0687 | 30 Z 0461 |
| 11 R 0231 | 01 N 0678 |
| 41 N 0852 | 07 K 0143 |
| 33 W 0530 | 33 K 0270 |
| 33 N 0213 | 38 D 0411 |
| 36 S 0643 | 35 C 0811 |
| 28 E 0420 | 16 B 0326 |
| 37 A 0939 | 26 R 0865 |
| 19 X 0003 | 19 B 0340 |
| 04 Y 0902 | 28 P 0373 |
| 07 L 0968 | 14 U 0495 |
| 08 A 0355 | 12 J 0351 |
| 35 E 0612 | 41 X 0990 |
| 08 L 0769 | 02 B 0821 |
| 07 R 0600 | 04 O 0804 |
| 04 Q 0982 | 03 F 0241 |
| 35 D 0856 | 23 D 0983 |
| 23 H 0737 | 17 Z 0552 |
| 01 U 0886 | 23 Q 0762 |
| 24 V 0448 | 04 K 0614 |
| 27 M 0105 | 39 B 0714 |
| 27 L 0222 | 41 K 0315 |
| 33 Q 0500 | 11 C 0914 |
| 21 H 0875 | 30 L 0196 |
| 30 P 0325 | 34 O 0518 |
| 11 C 0522 | 25 D 0205 |
| 28 Y 0013 | 15 O 0540 |
| 12 Z 0592 | 31 U 0281 |
| 15 F 0263 | 33 D 0287 |
| 34 H 0732 | 36 L 0270 |
| 06 O 0453 | 12 B 0251 |
| 40 E 0294 | 16 W 0984 |
| 07 H 0176 | 09 F 0452 |
| 04 J 0804 | 41 K 0780 |
| 28 N 0468 | 34 H 0761 |
| 07 O 0928 | 38 Q 0117 |
| 03 M 0049 | 38 X 0118 |
| 39 U 0071 | 16 J 0421 |
| 11 Z 0425 | 34 K 0551 |
| 17 J 0264 | 27 X 0867 |
| 39 Q 0356 | 34 F 0443 |
| 08 X 0920 | 01 N 0991 |
| 13 G 0520 | 40 E 0432 |
| 18 Y 0609 | 29 E 0382 |
| 06 D 0231 | 08 P 0016 |
| 06 O 088 | 12 E 0642 |
| 06 Z 0578 | 16 B 0464 |
| 25 A 0023 | 05 H 0344 |

]இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**பஸ்நிலைய படுகொலை வழக்கு.**

# 'இருவர் கட்டிப்பிடிக்க 1-ம் எதிரி கத்தியால் குத்தினர்'

யாழ்ப்பாணம், சனி

'மரணமானவரை இரண்டாம் மூன்றும் எதிரிகள் கட்டிப் பிடிக்க முதலாம் எதிரி கத்தியால் குத்தினர்' என நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் பஸ் நிலைய படுகொலை வழக்கில் சாட்சியமளித்த நாகராசா எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது தெரிவித்தார்.

இவ்வழக்கில் கடந்த ஏப்ரல் மாதம் 2-ந் திகதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 24 வயது வாலிபரான கிட்டிணனை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த கணபதி கிருஷ்ணபிள்ளை, செல்வத்துரை குணரத்தினம், கணபதி பஞ்சலிங்கம் ஆகிய மூவர்மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. வழக்கை விசாரணை செய்த யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் மேல்விசாரணையை இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் மென்டிசும், எதிரிகள் தரப்பில் புரக்டர் விசுவநாதனும் ஆஜராகியிருந்தார்கள். [ந. நி.]

## அன்னதானம

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் மனோன்மணி அம்பாள் அன்னதான சபையினர் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் புதன்கிழமை வரைமேற்படி அம்பாள் ஆலயத்தின் அருகாமையில் யாத்திரிகர்கட்கு அன்னதானம் வழங்க உத்தேசித்துள்ளனர். நயினை நாகபூஷணி அம்பாள் கோவிலுக்குச் செல்லும் அடியார்கள் உட்பட சகலரையும் இதில் பங்கு பற்றி ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு மேற்படி சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வட கொழும்பில் வெள்ள அபாயம்

கொழும்பு, வெள்ளி

வடகொழும்பு பிரதேசத்தில் பெரும் வெள்ளம ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது களு கங்கையின் நீர்மட்டம் நாகலகம் பகுதியில் வெள்ள நிலையை அடைய 9 அங்குலம் குறைவாக இருந்தது.

களனி கங்கையின் நீர்மட்டமும் விரைவாக உயர்ந்துகொண்டிருக்கிறது. நேற்று முழுதும் களனிப் பகுதியில் கடும் மழை பெய்துகொண்டிருந்தது.

அவிசாவளைப் பகுதியில் எப்போதையும்விட அதிகம் மழை பெய்துள்ளது.

வட கொழும்புப் பகுதி தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள மக்கள் பலர் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

## காவலாளி தாக்கப்பட்ட சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகர சபைப் பூங்காவின் காவலாளி ஒருவர் அண்மையில் சில இளைஞர்களால் தாக்கப்பட்டது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமாறு மாநகர சபை ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா பொலிஸ் சுப்ரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தைக் கேட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் இரவு மூன்று வாலிபர்கள் ஓர் இளம் பெண்ணுடன் பூங்காவிற்குள் தகாத முறையில் நடந்துகொண்டதாகவும், அப்போது அந்தக் காவலாளி அவர்களைக் கண்டுபிடித்ததாகவும் அப்போதே சம்பந்தப்பட்ட வாலிபர்கள் காவலாளியைத் தாக்கிவிட்டு ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுசம்பந்தமாகப் பூரண விசாரணை நடத்துமாறு பொலிஸ் சுப்பிரிண்டன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். ந. நி.

## சமரசமில்லை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிணற்றில் அள்ள விடாது தடுத்ததாகவும், கோடரியால் வெட்டவந்ததாகவும் சொல்லப்படும் புகாரை முன்வைத்து நகரசுத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இம்மாதம் 3-ம் திகதியிலிருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இது சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சி யாழ். கிளைக் காரியதரிசி பட்டினசபைத் தலைவர் திரு. நாகலிங்கத்திடம் சமரசத்துடன் தீர்க்குமுகமாகக் கோரியபொழுது அவர் தான் சமரசப் பேச்சுக்கு வருவதாகவும் ஆனால் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முடிவே தமது முடிவென்று கூறியுள்ளாரென்றும் தெரியவருகிறது.

புன்னாலைக்கட்டுவன், வெள்.

அண்மையில் வட, விஞ்ஞான ஆசிரியர் சங்க ஆதரவில் கனககரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கு விஞ்ஞானப் பொருட்காட்சிக்கு மன பிரிட்டிஷ் கவுன்சில் சுமார் 200 விஞ்ஞான நூல்களை அனுப்பியுள்ளது.

## சீன ராஜதந்திரி...

[1-ம் பக்கத் தொர்டர்ச்சி]

உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், அவர் தப்பி போய் விடாமல் எல்லா பொலிஸ் நிலையங்களுக் ம் விமான நிலையங்களுக்கும் எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சாக்ளா கூறினார். மூன்றுவது காரியதரிசிக்கு நால்வரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

**கன்னத்தில் அறைந்தார்**

நேற்று சீன தூதரகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி இந்திய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கன்னத்தில் அறைந்தது பற்றி சட்ட நிலைமை ஆராயப்படுவதாகவும் அதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சாக்ளா கூறினார். சீன அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்ட குறிப்புகள் யாவற்றையும் அவர்கள் உதாசீனம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி சபையின் இரு தரப்பினரும் கோரினார்கள். நேற்று சீன தூதரகத்திலிருந்து கிளம்பிய ஒரு காரைப் பொலிசார் பின் தொடர்ந்தபோது அக்கார் பாகிஸ்தான் ஸ்தானிகராலய வளவுக்குள் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது.

சீனத் தூதரகத்தின் முன் கான்ஸ்டபிள் சீனரால் கன்னத்தில் அறையப்பட்டபோதும் பொலிசார் தொடர்ந்து தூதரகத்திற்குப் பாதுகாப்பளித்தார்கள். ஆத்திரம் கொண்ட சனக்கூட்டத்தை அவர்கள் கட்டுப்படுத்தினார்கள்.

[முன் வந்த செய்தி 3-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org